அறிவு விளக்கம்.

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

புஸ்தகம்—I { 1901 ௵ மேமீ 10௳. திருவனந்தபுரம். } இலக்கம்—4

விஷயங்கள்.

தனிப்பாடல்:—தி. யா. சிவராமபிள்ளை.
பத்துப்பாட்டு:—பத்திராதிபர்.
எரிமலை:—A. K. கிருஷ்ணய்யங்கார்.
இரத்னசாஸ்திரபாடங்கள்:—I. ராமகிருஷ்ணய்யர், [B. A. L. T.
செல்வநூல்:—K G சேஷய்யர் B. A. B. L.
[illegible]:—P. V. கணபதிப்பிள்ளை, B. A.
செவ்வியாள்—A. K. கிருஷ்ணய்யங்கார்.
சமாசாரக்குறிப்புகள்.

பத்திராதிபர்:—வள்ளல் சோ. சிவஞானதேசிகர்.
திருநெல்வேலி,
[illegible] அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டு
திருவனந்தபுரத்தில் வெளிப்படுத்தப்படுகின்றது

1901.

☞ [illegible] 10௳ [illegible]

வருஷ சந்தா ரூ. 2 [illegible]
தனிப்பிரதி 1க்கு ரூ. 0-4-0 [illegible]

நமது பத்திரிகா போஷகர்கள். (PATRONS)

———:0:———

ஸ்ரீமான் தி. வேதாத்ரிச நாராயண முதலியார் அவர்கள்,
ஹைகோர்ட்டு பென்ஷன் ஜட்ஜ்.
திருவனந்தபுரம்.

,, T. பொன்னம்பலம்பிள்ளை அவர்கள்,
Conservator of Forests.,
Quilon.

,, P. தாணுப்பிள்ளை அவர்கள், M. A., F. M. U.,
Chief Secretary Travancore Government.,
திருவனந்தபுரம்

,, S. கணபதிப்பிள்ளை அவர்கள்,
உண்டியல் வியாபாரம்.,
திருவனந்தபுரம்.

,, P. C. வல்லிநாயகம்பிள்ளை அவர்கள்,
High Court Registrar.
திருவனந்தபுரம்.

,, மு. முத்துராமலிங்கம்பிள்ளை அவர்கள்,
மகாராஜா காலேஜ் தமிழ்ப்பண்டிதர்.,
திருவனந்தபுரம்.

,, M. R. இராஜாராம் அவர்கள்,
Registration Director.,
திருவனந்தபுரம்.

,, கே. எஸ். இராமசாமிஅய்யர் அவர்கள்,
உண்டியல் வியாபாரம்.,
திருவனந்தபுரம்.

,, எஸ். நீலம்பிள்ளை அவர்கள்,
Uujal Superintendent.,
திருவனந்தபுரம்.

,, எஸ். சாமிஅய்யங்கார், அவர்கள்.
திருவனந்தபுரம்.

,, ஈப்பன்பிள்ளை அவர்கள்,
Iuspector of Schools,
Southern Range.,
திருவனந்தபுரம்.

,, பரமேசுவரன்பிள்ளை அவர்கள்,
பென்ஷன் தாசில்தார்.,
திருவனந்தபுரம்.

,, இராகவாச்சாரியார் அவர்கள் B. A.,
தாசில்தார்.,
அகஸ்தீசுவரம் தாலூக்.

,, E. சுப்பராய முதலியார் அவர்கள்,
வக்கீல்.,
ஸ்ரீவைகுண்டம்.

,, சந்திரபாநு ராவ் அவர்கள்,
Irrigation Supervisor.,
சாத்சேரப்பேல்.

,, G. வெங்கிட்டசுப்பிரமணிய அய்யர் அவர்கள், B. A.,
தாசில்தார்.,
தோவாளை, பூதப்பாண்டி.

———

அறிவு விளக்கம்.

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

புத்தகம்—I | 190 -ஆ, மேஷ௴ - 10உ. திருவனந்தபுரம். | இலக்கம்—4

தனிப்பாடல்.

ஒன்றே முழுமுதல் உயிர்களோ பலவே
ஒன்றனை உணரா துணர்ந்தன பலவே
ஒன்றனை உணரும் உயிர்களும் உளவே
ஒன்றனை உணரும் உணர்வுசில பலவே
ஒன்றுணர் நெறிகளும் பலவே அவற்றுள்
ஒன்றொன்றி னன்றென்ப சிலவே பலவே
ஒன்றொன்று நன்றேனு முழுதுநன்
றொன்றே யென்றே உணர்திஎன் னெஞ்சே.

---

*பத்துப்பாட்டு.

செந்தமிழ்ப் பாண்டிவளநாட்டிற் சிறந்த பாண்டியன் றலைநகராகிய மதுரையம்பதியில் ஆலவாயுடையார் அருளிய சங்கப்பலகையில் ஒக்கவீற்றிருந்து அந்தமிழாய்ந்த கடைச்சங்கப் புலவர்களில் நாயகமணியென விளங்கிய நக்கீரர்முதலியோர்களால் இயற்றப்பட்டு, அக்கழகத்தாரால் ஆராய்ந்து கோவை செய்யப்பட்ட மேன்மை வாய்ந்ததொரு தொன்னூலாம் இப்பத்துப் பாட்டு.

"நூறடிச் சிறுமை நூற்றுப்பத் தளவே
ஏறிய வடியி னீரைம் பாட்டுத்
தொடுப்பது பத்துப்பாட் டெனப்படுமே."

---

* இவ்விஷயத்தின் சாரம் சென்றமாசி௴ 31உ திருவனந்த

"அதுவே,
யகவலின் வருமென வறைகுநர் புலவர்".

பொதுத்தன்மையில் பத்துப்பாட்டிற் கிலக்கணங் கற்பிக்கின்ற இச்சூத்திரங்களின் கருத்திற் கிணங்கி இந்நூலை ஆராயும்பொழுது இதில் அடங்கிய பாட்டுகள் 103 முதல் 782 வரை அடிகளை உடையனவாய் ஆசிரியப்பாவாற்செய்யப்பட்டிருக்கின்றன. இது முத்தகம், குளகம், தொகைநிலை, தொடர்நிலை யென்னும் நால்வகைச் செய்யுளில் தொகைநிலைச் செய்யுளின் பாற்படும். தொகைநிலைச் செய்யுள் "ஒருவருரைத்தவும் பல்லோர் பகர்ந்தவும்" ஆம் என்ப எனவே ஒருவரா லுரைக்கப்பட்டனவும் பலரா லுரைக்கப்பட்டனவுமாய்ப் பலபாட்டாய் வருவனவாம் என்பதாயிற்று. அவற்றுள் இப்பத்துப்பாட்டு பலராற் சொல்லப்பட்டன. இந்நூற்பா எதுகை முதலிய விகற்பங்களில்லாத ஆசிரியமாயிருத்தலின் ஆசிரியப்பா மிகப்பழமையுடைத் தென்பதூஉம், நாடக வழக்கில் எழுதப்படும் நூல்கட்கு மிகப்பொருத்தமுடையதென்பதூஉம் இந்நூல்கொண்டும் பிறகொண்டும் துணியலாம்.

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடிய திருமுருகாற்றுப்படை, முடத்தாமக் கண்ணியார் செய்த பொருநராற்றுப்படை, நல்லூர் நத்தத்தனார் பாடிய சிறுபாணாற்றுப்படை, கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பெரும்பாணாற்றுப்படை பொன்வாணிகனார்மகனார் நப்பூதனார் பாடிய முல்லைப்பாட்டு, மாங்குடி மருதனார் பாடிய மதுரைக்காஞ்சி, நக்கீரனார் பாடிய நெடுநல்வாடை, கபிலர் பாடிய, குறிஞ்சிப்பாட்டு, உருத்திரங்கண்ணனார் பாடிய பட்டினப்பாலை, பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடிய மலைபடுகடாம் என்னுமிவற்றுள் நக்கீரனாரால் இரண்டும், உருத்திரங்கண்ணனாரால் இரண்டும், இவை யொழிந்த ஆறும் அறுவரா

புரம் டௌன் ஹைஸ்கூல் மாணவர் சங்கத்தில் பிரம்மஸ்ரீ. சே. ஜி. சேஷய்யர். B. A. B. L அவர்கள் தலைமை வகிக்கப் பிரசங்கிக்கப்பட்டது. அன்று பிரசங்கத்திறுதியில் சபாநாயகர் பத்துப்பாட்டு பிற்காலத்திய நூல்கள் போன்று இயற்கைக்கு விரோதமான படாடோபமாகிய உவமைகளும்

93

னும் ஆக எண்மரால் பாடப்பட்டுள்ளன இப்பத்துப்பாட்டென்க. இவற்றுள் முதலிற் கூறிய நான்கும் இறுதியிற்கூறிய வொன்றும் ஆற்றுப்படைகள். மலைபடுகடா மென்பதனைக் கூத்தராற்றுப்படையென வழங்குவதுமுண்டு. இப்பெயர் இதற்குஇயல்பிற்பொருத்தமுடையதா யிருப்பினும் ஆசிரியர் கபிலர் பாட்டுடைத்தலைவன் நாட்டின்கண்ணுள்ள மலைவளத்தைக் காட்டக் கருதி 'மலைபடுகடாம்' என்னும் சிறப்புப்பெயரிட்டன ரென்க.

ஆற்றுப்படைஎன்பது வழிப்படுத்துதல் எனப்பொருள்படும். அது பரிசுபெற்றானொருவன் தன்னெதிர்ப்பட்ட புலவர், பாணர், கூத்தர், விறலியர் முதலியோரை வள்ளலின்பால் வழிப்படுத்துதல்.

"புரவலன் பரிசு கொண்டு மீண்ட
இரவலன் எதிரேறு மிருங்கானத்திடை
வறுமையுடன் வருஉம் புலவர் பாணர்
பொருநர் விறலியர் கூத்தர்க் கந்தப்
புரவல னூர் பெயர்கொடை பராஅ
யாங்கு நீ செல்கென விடுப்பதாற் றுப்படை".

"ஓங்கிய வதுதா னகவலின் வருமே"

என்ப.

திருமுருகாற்றுப்படை யென்பது வீடுபேறு விரும்பிய இரவலனொருவனை முருகக்கடவுளின்பால் வழிப்படுத்தியதாகக் கூறும் இந்நூல் ஒன்று மாத்திரம் மதசம்பந்தத்தால் சைவத் திருமுறைகளில் பதினோராந் திருமுறையில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருத்தலின் தற்காலம் பயின்றுவரும் நூல்களிலொன்றாக ஒருவாறு மதிக்கலாம். இதனை நச்சினார்க்கினிய ருரையுடன் தெளிவுபட முதன் முதல் அச்சிட்டு வெளிப்படுத்திய வித்வத் ஸ்ரீமான் ஆறுமுக

கற்பனைகளுமின்றி உள்ளதையுள்ளவாறு விளக்குமியல்பினது என்பதுபோன்ற விஷயங்களை வற்புறுத்தியும், ஆங்கிலத்தில் டெனிஸன் (Tennyson) முதலிய கவிகள் செய்த நூல்களோடு ஒப்பிட்டுக்காட்டியும், இத்தகைய அரிய நூல்களைத் தொன்றுதொட்டே பெற்று வழங்கிவராநின்ற நம் மொழி

நாவலரவர்கட்கு நாம் நன்றியறிதல் கூறுதல் தகுதியாம். ஏனைய ஒன்பது பாட்டும் வழங்குவாரின்றி மறைந்தொழிந்து போயின. ஆயினும் பத்தையும் ஒருங்கே திரட்டி அவற்றிலுள்ள அரும்பதங்களையும் அருந்தொடர்களையும் உரையாசிரியர் கருத்திற்கிணங்க விளக்கிப்பிரதிபேதங்களையுங்காட்டித் தமிழுலகத்திற்குப்பயன்படும்படி அச்சிட்டு வெளிப்படுத்தின கும்பகோணம் வித்தியாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பிரம்மஸ்ரீ வே சாமிநாதையரவர்கட்கு நாம் என்றும்நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்

ஆற்றுப்படைகளொழித்த ஏனைய ஐந்து பாட்டினுள்ளும் மதுரைக்காஞ்சி உலகநிலையாமையை அறிவுறுத்துவது. காஞ்சியாவது வீடுகாரணமாக அறம்பொருளின்ப முதலியவற்றால் நிலையில்லாத உலக இயற்கையைக் கூறுவது. ஆகவே மதுரையரசற்குக் கூறிய காஞ்சி மதுரைக்காஞ்சியாம்.

காஞ்சித்திணைக்கு இலக்கணங்கூறிய தொல்காப்பியத்திற்கு நச்சினார்க்கினியரியற்றிய உரையில் 'வீடுபேறு நிமித்தமாக சான்றோர் பலவேறு நிலையாமையை அறைந்த மதுரைக்காஞ்சி இதற்குஉதாரணமாம் என இந்நூலையே எடுத்துக் காட்டியிருக்கின்றார். முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை ஆகிய நான்கும் காமப்பகுதியாகிய அகத்திணையமைதியுடையனவாம்

இப்பத்துப்பாட்டுக்கு உரைசெய்தவர் நச்சினார்க்கினியர். இவர் சங்கச்செய்யுளும் தொல்காப்பியமும் தக்கவுரையின்றி அருகிவருவதைக்கண்டு இலக்கிய அமைதிகட்குத்தொல்காப்பிய விதிகளைக் காட்டியும் தொல்காப்பியத்தைச் சங்கச்செய்யுள் முதலியபழைய இலக்கியங்களால் விளக்கியும் பழையநூல்களைப் பலர்க்கும் பயன்படும்படிசெய்வதே இவரது நோக்கமாதலின் தமது காலத்திற்புதி

யின் சிறப்பினைத் தற்காலத்தில் நம்மவர் பலர் அறியாதிருப்பினும் அயல்நாட்டார் அதனை நன்கறிந்து பயின்று பாராட்டி யாதரித்து வருகின்றனரென்றும், அதற்குதாரணமாக இங்கிலாந்தில் கிறிஸ்தமத குருவாகிய ஜி யூ. போப்பையரவர்களையும் அவர்கள் தம் எண்பத்திரண்டாம் வயதாகிய

தாய்த்தோன்றிய நூல்களுளொன்றையும் இவரது உரைகளில் எடுத்துக்காட்டவில்லை. இவ்வுரைத்திறம் நுட்பமாய் நோக்குபவர்க்கே விளங்கும். ஒவ்வொருபாட்டினிறுதியிலும் ஆசிரியர் இன்னாரின்னாரென்று குறியாவிட்டால் ஆசிரியர்கள் பெயரும் அறிய இடமில்லாதாகும். "உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர்" என்பதால் இவர்பெருமை விளங்கும்.

இப்பத்துப்பாட்டுத் தன்னுரைதொறுஞ் சென்று நுணுகி நோக்கும் கல்வியறிவாளர்க்கே முதன்முதல் தன்கிடக்கையியல்பிற்றானே பொருள்படுவதன்று. நச்சினார்க்கினியராயினும் அவர் அதற்கியற்றிய உரையும் ஒருபுடை அத்தகையதேயாதல் கூறவேண்டா. ஆதலின் மிகப்பொறுமையோடு முற்றும்பலமுறையாராய்தல்வேண்டும். அங்ஙனம்ஆராய்வதில்உள்ளவருத்தம் ஒருக்காலும் வீண்போகாமல் இன்பமும் அறிவு மிகப்பயக்குமென்பது திண்ணம். வேறுவகையால் அறியமுடியாத முற்காலத்து முடிமன்னர்களிற் சிற்சிலர் சரித்திரங்களும் அக்காலத் தவரது ஒழுக்கமுதலியனவும் இந்நூலால் அறிதற் கிடமுண்டு. ஏறக்குறைய 1800 ஆண்டுகளுக்குமுன் கடைச்சங்கப்புலவர்களாலியற்றப்பட்ட இந்நூலை ஆராயும்பொழுது வடமொழியில் மிகவல்லுநராய் மதிக்கப்பெற்ற காளிதாசாதிகவிசிரேஷ்டர்களியற்றிய அரும்பெருங் காப்பியங்களெல்லாம்மிகப்புதியனவேயென்பது தெளிவாய்ப் புலப்படும். இந்நூலைக்கற்குந்தோறும் மனவெழுச்சியை மிகவிளைக்கின்றது. கருவூலம்போற் சமயத்திற்கேற்ற சொற்களும், மேலானகருத்துகளும், மற்றொருமொழிகலவாத்தூய்மையும், சொற்சுவையும், பொருட்சுவையும் செறிந்துகிடக்கும் இந்நூல்போல வேறுபல நூல்கள் நமதுகைக் கெட்டாமைக்கு நாம் இரங்க வேண்டியதன்றோ? பிற்காலத்தவர்களாவது இத்தகைய நூல்களின் நடையைத்தழுவிப்பலசெய்துதந்தனரா? அதுவுமில்லை. மதப்ப

முதுமைப் பருவத்திலுங்கூட சைவசமயாசாரியருள் ஒருவராகிய ஸ்ரீமத் மாணிக்கவாசகசுவாமிகள் அருளிய திருவாசகமென்னும் அரியநூலை ஆங்கிலமொழிபெயர்ப்புடன் ஆங்காங்குச் சைவசித்தாந்தசாரக்குறிப்புகளும், ஆசிரியர் சரிதமும், சைவசித்தாந்த சாரசங்கிரகமும் அடங்கிய முகவுரை

ற்றுக்கோடுடைமையாற்பல்அந்தாதி, பிள்ளைத்தமிழ்முதலியஇயற்
றினர். இவை தாம் எத்தகையன?; தமிழ்மொழியின் அழ
கையும் சிறப்பையும் அறிய விரும்புவோர்க்குஅவற்றைத்தெளிய
எடுத்துக்காட்டிக் கற்பவர்க்கு மன வூக்கத்தையு மெழுட்புந் தகை
யன தொன்று தொட்டு உலகவழக்கம் பெற்று இன்னும் அத்த
கைமை குன்றாப் பழமொழி தமிழைத் தவிர வேறில்லை யென்பது
பல பெரியபுலவர்துணிபு. உலகவழக்கிழந்து உயிர்நீத்துக் கிடப்ப
னவாகிய ஆரியமுதலிய பழமொழிகள் போலாது இன்றும் தன்
தன்மை குன்றாத் தகைத்தாய் இளமை கழியாதிருப்பதூஉம்
தமிழேயன்றே! எனினும் அயல்மொழி விரவித் தன்மொழி நழு
வி அதன் பருவத் திற் கியன்ற அழகுகுன்றுதல் ஆன்றோர் பலர்க்
கும்துன்புறுத்து வதேயாம்.

இதனை வாசிக்கின்ற நமதுபத்திரிகாபிமானிகளாகிய அன்
பர்களே! எவ்வளவோ பேராற்றல் படைத்தவர்களின சந்ததிகளா
கிய நாம் இதனைக்கவனியாதிருத்தல்நம்முன்னோர்களின்பெருமை
க்குத்தீங்கிழைத்தவராதலிற் றடைஎன்னை? இன்னுஞ்சிறிதுகாலம்
இவ்வாறு வறிதே தாழ்க்கின் நமமொழியின் நிலை எவ்வாறாம்! அந்
தோ! நம்முன்னோர்கள் நாம் இந்நிலையிலிருப்போமென்று தம்கன
விலாயினும் எதிர்பார்த்திருப்பார்களா? ஐயகோ!இதனை நினைக்கும
பொழுதெல்லாம்நம்மனம் வெட்கி யுட்கி நடுநடுங்குகின்றது. இத
னை நம்மவர் நன்கு சிந்தித்தல்வேண்டும்!!

இதுகாறும் பத்துப்பாட்டைப்பற்றிப் பொதுவகையாற்கூ
றினும். இனி அவற்றுள் ஒவ்வொன்றனையும் சிறப்புவகையான்
ஆராய்வாம்.

யுடன் பார்ப்பவர் படிப்பவர் மனதைக் கவரத்தக்கவிதத்தில் அச்சிட்டுவெ
ளியிட்டிருப்பதையும் எடுத்துக்காட்டியும் கேட்டவர் மனம் ஆனந்தபரவச
மடையும்படி கூறி முடிக்க,ஷை சங்கத்தின் உதவிக்காரியதரிசி இனியசெந்
தமிழ் நடையில் தலைவர்க்கும் அங்குள்ளார்க்கும் வந்தனங்கூறக் கரதாடன
ஆகோஷத்தோடு சபைகலைந்தது.

எரிமலை.

எரிமலை என்பது ஒரு தொடர்மொழி. இதற்கு நமது பாலபாடபுஸ்தகத்திற் கூறியிருக்கும் பொருளிலக்கணம் "தலையிடத்திருந்து புகையையும் தீச்சுடரையும் வெளியிட்டுவரும் மலை" என்பதாம். உண்மையில் இப்பொருளிலக்கணம் தவறுடையதே. மக்களின் இளமைப்பிராயத்தில் மதித்தறியும் சக்தி குறைந்திருத்தல் இயல்பு. அது போலவே உலகத்தின் இளம்பிராயத்தில் உண்டான அறிவும் ஐயந்திரிபற்றதாயிருத்தல் அரிது. அபூர்வமான காட்சியைக் காணும் ஒருவனுக்கு முதலாவதுண்டாவது கரைகடந்த வியப்பும் பயமும் ஆம். அதனால் அக்காட்சியின் தன்மையைஉள்ளபடி அறிந்துகொள்ள அவன் ஆற்றலில்லாதவனாகிறான். அது கடவுளின் கோபத்தாலோ சந்தோஷத்தாலோ அக்காலத் தவ்விடத்து ஏவப்பட்டிருப்பதாய் அவன் நம்புகிறான். பின்னர் பன்முறை பலவிடங்களில் இத்தோற்றம் உண்டாய் வருகின்றதென அறிந்தாலன்றி ஆதியில் இவன் கொண்ட கொள்கையை எளிதிற் கைநெகிழவிடான். அது மட்டும் முதிர்ந்த அறிவில்லாத பலர் கூறும் கட்டுக்கதை முதலியவற்றை உண்மையான சரித்திரமாக நம்பிவருவதுடன் சிறுபான்மையினராகிய முதிர்ந்த அறிவுடையோர் கொள்கைகளையும் அவமதித்துப் பேசவும் அஞ்சான். ஆயினும் காட்சி முதலிய ஐம்புலனறிவும் பயிற்சியால் தெளிந்து, வருங்காலத்தில், முன்பிடித்திருந்த கொள்கையனைத்தும் தவறானவை எனவறிந்து தானேஅவற்றைக் கைநெகிழ்த்தி விடுவன். அது போலவே உலகத்தின் சைசவப்பிராயத்தில் உண்டான அறிவை, அதன் முதிர் பருவத்தில் கைவிட்டுச், காலப் பழக்கத்தால் தமக்குக்கிடைத்திருக்கும் அறிவின் முதிர்ச்சியைக்கைப்பற்றி ஒழுகுவது பெரியோர் தன்மையாம். சாஸ்திரஞர் புதிதுபுதிதாய்க்கோட்பாடுகளைக் கண்டுபிடித்துவருவதற்கும், முற்காலத்தார் சாஸ்திரமென நம்பிக்கற்றுவந்தவைகளைப் பிற்காலத்தார் புறக்கணித்துத் தள்ளிவிட்டு வேறு கோட்பாடுகளை நம்பிக் கற்றுவருவதற்கும் இதுவே காரணமாம்.

முற்காலத்திலிருந்த ஐரோப்பியர்கள், மத்திய தரைக்கடலில் இருக்கும் நாலைந்து எரிமலைகளைத்தான் கண்டனர். லிப்பாரி தீவிலிருக்கும் வல்கன் என்ற எரிமலை, அவற்றுள் ஒன்று. அதிலிருந்து எரிமலையை அப்பெயரிட்டுச் சுட்டிக் கூறினார்கள். எரிமலையைப்பற்றி முற்காலத்திலுண்டாயிருக்கும் கட்டுக்கதைகள் பல. கிரேக்கியர்களும் உரோமியர்களும் அவற்

றைப் பற்பல கொடிய தேவதைகளின் இருப்பிடங்களாகவும் உலைக்களங்களாகவும் கொண்டாடி வந்தனர். ஆரியர்களாகிய நமது முன்னோர்களும் உலக நூற்பயிற்சியில் அதிகம் உழைத்தவர்களல்லர். ஆதலால் கடலிடத்துச் சிற்சிலகாலங்களில் எரிமலைகள் வெடித்துத் தீச்சுடர் கிளம்புவதைக் கண்டிருத்தல் கூடும். அதனைப் ‡ படபாமுகாக்நி யின் செய்கையென்று புராணங்களிற் கூறியிருப்பதுண்டு. வடவைத்தீயை கடல் நீர் பெருகிக் கரை புரண்டு மேலெழும்பி நிலத்தை மூடி விடாமற் காப்பதற்குக் கடவுளால் கடலின் நடுவிடத்தில் படைக்கப்பட்டிருக்கும் பெண்குதிரையின் முகவுருவம் வாய்ந்த ஓர் தீத்திரள் என அவர்கள் கூறிவந்தார்கள். மேலைக் கத்திலுள்ள தீப்பகுதியையே காகலோகமென வர்ணித்திருக்கிறார்கள் என் றும் ஊகிக்கலாம். இக்காலத்திலும் இக்கதைகளை உண்மையென நம்பியிருப்போர் பலருளர் என்பது தேசசஞ்சாரிகள்வாய்மொழியால்விளங்கும்.

இத்தகைய தவறான கொள்கைகளைப் போக்கடித்து, எரிமலையின் இயல்பை உள்ளபடி மாந்தர்க்குச் சொல்ல முதலாவது முயன்றவன், இடாலியா நாட்டிற் பிறந்த Spallanzani என்போன். இவன் தன் தேசத்திலிருக்கும் எரிமலைகளை நேரிற்போய்ப் பார்த்து அவை புகைபெயருங் காலத்தில், அவற்றினிடந்தோன்றும் செய்கைகளை நன்குசோதித்தறிந்து, பலபுதுமைகளை வெளியிட்டனன். அதேகாலத்தில் Dolomian என்ற பிராஞ்சிய சாஸ்திரி, *எரி எறி கெடிப்பின் வழியாய் வெளிப்போந்துகிடக்கும் பொருட்டொகுதிகளை, பொருளாராய்ச்சி முறை பிறழாமற் சோதித்து, அவ்வறிவைப் பெருக்கினர். Sir William Hamilton என்ற ஓர் ஆங்கிலேய சாஸ்திரியார், எரிகங்கிகள் காலக்கிரமத்தில் அடையும் வேறுபாடுகளை முறையாய்த்தேர்ந்து அவற்றின் வளர்வுதேய்வுகளுக்குத்தக்ககாரணங்களைத் தெரிவித்தார். இவர்க்குச் சிறிதுகாலத்திற்குப்பின், Vonbuch, Humbolt Abict. என்ற மூன்று ஜர்மன் சாஸ்திரிகள் பற்பல தேசங்களுக்குப்போய் அங்குள்ள எரிமலைகளைச் சோதித்து பற்பல புதியசெய்திகளைத் தெரிந்து கூறினார்கள். ஆயினும் இக்கோளம் உயிர்கள்வாழ்வதற்குத் தகுதியுடையதானபின்னர், எரிமலைகளால் என்னென்ன சாதகபாதகங்களை அடைந்திருக்கிறதென்பதை நுட்பமாய் ஆராய்ந்து எரிமலை களின் பூர்வ சரித்திரத்தையும், அவற்றின் சுபாவத்தையும் மிகத்தெளிவாய்க் கண்டு

‡ படபா என்னும் வடசொல் தமிழில் வடவைஎன்றாயிற்று.

* [illegible]

கூறியவர் Poulet Scrope என்பவரே. இவர் வெட்டிவிட்ட வழியைப் பின்பற்றி, நடந்து பலர் பிற்காலங்களில் பல நூல்கள் எழுதியிருப்பதன்றி. 1825ம் வருஷத்தில், "எரிமலையைப்பற்றிய சிற்சிலவிசாரணை" என்ற பெயரிட்டு, இவர் எழுதியிருக்கும் புத்தகமே, இவ்விஷயத்தைப்பற்றி எழுதப்பட்டிருக்கும் புத்தகங்களுள் முதன்மையானது.

இப்பல நூல்களிலும் உரைக்கிடப்பட்டிருக்கும் விஷயங்களைத் தொகுத்துரைப்பதே இவ்வுபன்னியாசத்தின் நோக்கம். கனவான்கள் யான் எடுத்த பிரயாசைக்குக் கைம்மாறாகச் சிறிது நேரம் பொறுமையுடன் இருந்து இதனைக்கேட்க அன்புகூர்ந்து உடன்படுதல் வேண்டும்.

எரிமலையின் தன்மையை, எங்ஙனம் ஆராய்ச்சியால் அறிதல் கூடும்? இஃது அசாத்தியமன்றோ? என முதலிலேதோன்றும். உபாயமும் பொறுமையும் இல்லாதார்க்கு இஃது அசாத்தியமே. முற்காலத்தில் விசூவியஸ் என்ற எரிமலையில் உண்டான ஒரு எரி எறிவை (Eruption) உற்றுப்பார்த்துச் சந்தேகம் நீக்கிக்கொள்ள முயன்ற Pliny என்ற ஒருவர் தம்முயிரை இழந்தார். அம்மலையில், பின்னர்த் தோன்றிய வேறோர் எரி எறிவைச் சோதனைசெய்துவரற்காகப் புறப்பட்டுப்போன ஓர் மாணாக்கர் கூட்டத்திற்கும், அதே கதிதான் நேரிட்டது. இத்தகைய காரியங்களில், ஆவல்மட்டுமிருந்தாற் போதாது. அதற்குத்தக்க உபாயமும் தேடிக்கொள்ள வேண்டும். இன்றேல், அபாயம் வருமென்பது திண்ணம். உபாயத்துடன் போவோர்க்கு, எல்லாக்காரியமும் கைகூடும். உபாயமின்றிப் போவோர் சிக்ஷைக்குள்ளாவார்கள். பிளினி என்பவர்க்கும், நியோப்பாலிட்டன் மாணாக்கர்களுக்கும், அபாயம் சம்பவித்தது, உபாயமில்லாமற் போன காரணத்தினாற்றான்.

ஆவியினால் இயக்கமுறும் ஒரு பெரிய இயந்திரத்தின் கட்டு, புடைபெயர்ச்சி, வலி முதலியவற்றை அறிய விருப்பங்கொள்ளும் ஒருவன், அவ்வியந்திரம், மிக்கவலியுடன் வேலை செய்து கொண்டிருக்கையில், அதன் கிட்டப்போய்ப் பார்த்தால், யாதறிவன்? அப்பொழுது அதனோடு நெருங்கிப் பழகுவானாயின், "அவன் காரியம் கெத்திகூடும்" என்பது நிச்சயம். ஆதலால், அவ்வியந்திரம், வேலையின்றி யிருக்கும் பொழுதேனும், அல்லது அவ்வியந்திரத்தை விருப்பத்திற்கிசைய நடத்தும் வல்லமை யுடைய ஒருவன் கூட நின்று நமக்குக் காட்டித் தரும் பொழுதேனும், அதனை நாம் பார்க்க வேண்டும். ஆயின், நமக்கு அதன் தன்மையும், அதனுறுப்புக்கள் தனித்தும் தொடர்ந்தும் செய்யும் வேலைப்பாடும், நன்கு மனதிற் பதியுமன்றோ?

அப்படியே, எரிமலையின் சுபாவத்தை யறிய விரும்புவோனும், அம்மலை, தொழிற்பாடின்றி அடங்கியிருக்கும் பொழுது, அதன் சமீபத்திற் போய், அதனைப் பார்த்தறிதல் வேண்டும். அல்லது, சாந்தமாய்த் தொழிற்பாடுடைய மலைகளைப் போய்ப் பார்ப்பதிலுங், குற்ற மில்லை. அத்தகைய எரி மலைகளும் சிற்சில உண்டு. அவற்றைப் போலவே மற்ற மலைகளுமிருக்கும். சாந்தமாய் வேலை செய்யுங் காலத்திற் போலவே, உக்கிரமாய் வேலை செய்யுங் காலத்தும் அவை இருக்கும். ஒன்றை, முன்கூறிய நிலையிலிருக்கும் பொழுது பார்த்தறிந்து கொண்டவனுக்கு, பின் கூறிய நிலையிலிருக்கும் பொழுது அஃதெப்படி யிருக்கும் என்றறிந்து கொள்வது, பிரயாச மின்றாகும். அவ்வகுப்பில் அடங்கிய ஏனையமலைகளுமின்னமாதிரியில் வேலை செய்யும் என்று தெரிந்து கொள்வதும், அவனுக் கெளிதே.

இவ்வுண்மையைத் தெரிந்து, எரிமலையைச் சோதித்தறியப் புகுந்தவர்களுள் முந்தினவர், (Spallanzani) என்றவர்தான். மத்திய தரைக்கடலில் (Stromboli) என்று ஓர் எரிமலையுண்டு என்றும், அம்மலை இரண்டாயிர வருஷமாய் அடிக்கடி முறையாய் எரி எறிந்து வருகிறதென்றும், ஆயினும் ஒரு காலத்திலாவது அபாயம் விளைக்கும் படியாய் அம்மலை வெடித்திருப்பதில்லை யென்றும், தெரிந்து கொண்டு, இவர் அம்மலையில் கிட்டப்போய், தொடர்ச்சியாய்ப் பல பரிசோதனைகள் பார்த்து, அக்னிமலையின் 'மெய்யியக்கம்' இன்னதன்மைத்த என்று, பின்னோர் நணிந்துகூறுவதற்குத் துணைசெய்த பல கோட்பாடுகளை வெளியிட்டார். இவர்க்குப் பிற்காலத்திலும், பல இயற்கை நூலாராய்ச்சிவல்லோர், அம்மலைக்கு நேருறச்சென்று, அவர் கூறியவற்றை வற்புறுத்தி யிருப்பதுடன், நூதனமாய்ப் பற்பல விஷயங்களையும் கண்டு, எழுதியிருக்கிறார்கள். ஆதலால் (Stromboli) மலைக்குள் நிகழும் நிகழ்ச்சிகளைப் பலரும் உணர்த்தவாறு தொகுத்துக் கூறுவது, இவ்வரிய விஷயத்தை விளக்குவதற்கு இலேசான வழியாகு மென்று நினைத்து, அவற்றை ஈண்டு வரைந்திடுவென்.

ஸ்திராம்போலி என்பது, அக்னிமலையின் செய்கையால்கடலிடத்துத் தோன்றிய ஓர் தீவு. அது சமமற்ற ஓர் வட்டமான வடிவினை உடையது நெல்லம்பாரத்தைப் போற் குவிந்திருக்கும். மத்திய தரைக் கடலின் நீர் மட்டத்திற்கு மேல் 3090 அடிபொங்கி யிருக்கின்றது. அம்மலையின் பக்கத்தில் உண்டாயிருக்கும் ஓர் முனையின் வழியாய், நீராவி குபீர் குபீர் என்று எபபொழுதும் எழும்பிக் கொண்டிருப்பதைக் காணலாம். இவ்வாவிக் கூட்டம் மேலெழும்பி ஒன்றுய்த்திரண்டு, அம்மலையின் மேல், மேக

இயற்கைச்சாத்திரப் பாடங்கள்.

1-வது பொது விஷயம்.

அண்ட பிண்ட சராசரங்கள் அனைத்தின் குணம், சேர்க்கை முதலிய வற்றையும், அவற்றுள், கண்களுக்குப் புலப்பட்டேனும் புலப்படாதேனும் உண்டாகும் மாற்றத்தையும், அம்மாற்றத்தின் காரண காரியத்தையும் சுபாவத்தையும் குறித்து விரிவாக உரைக்கும் நூல்களின் தொகுதியே இயற்கைச் சாத்திரமெனப் பெயர் பெறும்.

ஆகாயத்தில் விரைவில் மிதந்து செல்லாநின்ற எவ்வளவோ பெரிய கோளங்களாதியாய்,* பூதக் கண்ணாடிக்கும்புலப்படாத எவ்வளவோ சிறிய பரமாணுக்களீறாய்ப் பற்பல அளவையும், வடிவையும், நிறத்தையும், சேர்க்கையையும் பெற்றுள்ள பொருள்களைப் பற்றிச் சொல்லும் நூல்களைப்படித்தல் ஒருவனுக்கு மிகுந்த குணத்தை யளிக்கின்றது. ஒருவனது புத்தியும், அறிவும் விரிதலுடன் அவனது நற்குணங்களும் ஆஸ்திகபுத்தியும் கூடிக்கொண்டே வருகின்றன. கைத்தொழில்களும் இந்நூல்களுட் பலவற்றால் உதவி செய்யப் பெற்று வியாபகமடைந்து மனிதருக்குப் பொருளையும் சுகத்தையும் அளிக்கலாயின. இவை நிற்க, இயற்கைப் பொருள்களுடன் செய்யும் மௌன சம்பாஷணத்தினின்றும் உண்டாகும் மன மகிழ்ச்சியின் பெருமை அனுபவித்தோ ராலன்றி ஏனையோரால் அறியப்பட மாட்டாது.

இத்தன்மைத்தான நூல்களை ஆராய்ச்சி செய்ய இரண்டு வழிகள் ஏற்பட்டிருக்கின்றன. கடவுளால் இயற்கை யென்னும் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கும் அரியபெரிய சாஸ்திர நுட்பங்களை உற்று நோக்கல் (Observation) செய்துநோக்கல் (Experimeut) என்ற விரண்டு வழிகளால் அறிந்து கொள்ளல் வேண்டும்.

(1) உற்று நோக்கலாவது:—கண்ணிருந்தும்இலராய்ப்பாராதுசெல்வோரைப்போ லன்றி இயற்கையில் நிகழும் மாற்றங்களை உற்றுநோக்கி அவற்றின் காரண காரியங்களை யறிந்துகொள்ளுதலேயாம்.

(2) செய்து நோக்கலாவது:—காலமும் பொருளுமிருந்தும் வீண் செலவு செய்வாரைப் போலன்றி இயற்கையில் நிகழும் மாற்றங்களைப்போல் உள்ள மாற்றங்களை நாமே காரணங்களை வைத்துக்கொண்டு உண்டாக்கி அவற்றின் காரிய சுபாவங்களை யறிந்துகொள்ளுதலேயாம்.

ஆகவே இவ்விரண்டு வழிகளையும் இயற்கை சாத்திர நுட்பங்கள் வை

---

* இதனைச் சிற்றுருவிளக்கியென்பர் [illegible] விளக்க நூலாசிரியர் [illegible] என்பவர்கள்.

த்திருக்கும் பெட்டியின் திறவுகோ லென்று கூறலாம்.

கோள சாஸ்திரம் போன்ற சில சாத்திரங்களிற் பெரும்பான்மை முதல் வழியும், கிருமி சாஸ்திரம் போன்றவற்றில் இரண்டாம் வழியும், பூமி சாஸ்திரம் போன்றவற்றில் இரண்டு வழிகளும் உபயோகப்படும்.

இயற்கையில் நிகழும் மாற்றங்கள் பேதமாற்றங்கள்(Chemical changes)என்றும், அபேதமாற்றங்கள் (Physical changes)என்றும் இருவகைப்படும்.

(1) பேத மாற்றங்களாவன:—ஒரு பொருளில் நிகழ்ந்த மாற்றத்தின் காரணத்தால் அப்பொருளின் குணமும், சேர்க்கையும் பேதப்படின் அம்மாற்றத்தைப் பேதமாற்றம் எனல் வேண்டும்.

(2) அபேதமாற்றங்கள்:—ஒரு பொருளில் நிகழ்ந்த மாற்றத்தின் காரணத்தால் அப்பொருளின் குணமோ சேர்க்கையோபேதப்படாவிடின், அம்மாற்றத்தை அபேதமாற்றம் எனல் வேண்டும்.

(உதாரணம்) (1) சர்க்கரையை ஒரு பாத்திரத்திற் போட்டு சுடவைத்தால் கொஞ்ச நேரத்திற்குள் கரியாய் விடுதலன்றிச் சுவையும் மாறிப்போம்-ஆதலால் இது பேதமாற்றம்.

(2) ஒரு இருப்புருண்டையை யெடுத்துச் சுடவைத்தால் சூடடைந்த இருப்புருண்டையாவதே யன்றி அதன் குணமோ சேர்க்கையோ மாறுவதில்லை. ஆதலால் இது அபேதமாற்றம்—இப்படியே மற்ற மாற்றங்களைப் பார்த்து வகுத்துக்கொள்ளல் வேண்டும்.

இப்பிரபஞ்சத்திலுள்ள பொருள்களை யெல்லாம் மூன்று வகுப்பாகப்பிரிக்கலாம். (1) மூலப்பொருள் (Elements) (2) பேதச்சேர்க்கைப்பொருள் (Chemical compounds) (3 அபேதச்சேர்க்கைப்பொருள் [Mechanical compounds].

(1) மூலப்பொருள் எப்பொருளினின்றும், அப்பொருள் அல்லது வேறு பொருள் பிரிக்கக் கூடாதோ, அப்பொருளே மூலப் பொருள் எனப்படும்.

(உ—ம்) வெள்ளி, இரும்பு, கரி, கந்தகம் முதலியன.

(2) பேதச்சேர்க்கைப்பொருள் எப்பொருளினின்றும் மாறுபட்ட குணமுடைய வேற்றுப் பொருள்களைப் பிரிக்கலாமோ அப்பொருளே பேதச் சேர்க்கைப் பொருளெனப்படும்.

(உ—ம்) சர்க்கரை (கரி, பிராணவாயு, ஜலஜவாயு, என்பன இதில் அடங்கும் இவை ஒன்றிற்கும் சர்க்கரையின் குணம் இல்லை)

தனைப்போல 'செல்வமென்றால்—செல்வம் யாவரு மறிந்ததாயிற்றே. இதற்கும் வியாக்கியானம் வேண்டுமோ?' என்று மறுமொழி யளிக்கக் கூடிய நிலைமையிலிருப்பர்கள். ஆனால் செல்வமின்னதென்று அறியவேண்டியது முக்கியமென்பதற்கு சற்றுமையமில்லை. பெரும்பான்மையரும் அதைப் பற்றி பிசகான கருத்துக்கொண்டவரென்றேசொல்லவேண்டும். செல்வமென்பதியாது? என்ற விஷயத்தைப்பற்றி ஆலோசிப்பாம்.

II

பணந்தானே யறிவாகும் பணந்தானே வித்தையுமாம் பரிந்துதேடும்.
டணந்தானே குணமாகும் பணமில்லாதவர் பிணமாம் பான்மை சேர்வர்
பணந்தானே பேசுவிக்குந் தண்டலை நீணெறியாரே பாரின்மீது
பணந்தானே பந்தியுறுங் குலங்கீழே குப்பையிலே படுக்குந்தானே.

பணமானது இத்தகைய விசேஷங்களை விளைவிக்கும் ஆற்றலுடையதாயின், அதுவே செல்வமென நாம் கொள்வது பழுதோ? நம்முடைய உயிர் வாழ்க்கைக்கு வேண்டிய, உணவு, ஆடை, ஆபரணம் முதலிய எல்லாப் பொருள்களும், பணமாத்திரமிருப்பின் நம்முடைய கையிலிருப்பனவாகும். ஒருவனை தனவானென்று கூறுவோமாகில் அவனுக்கு இத்தனை லக்ஷம் அல்லது இத்தனை ஆயிரம் ரூபா அல்லது வேறு நாணயமுளது என்றாயினும் இத்தனை ரூபா பெறும்படியான பூஸ்திதி முதலியனவுள் என்றாயினும் அன்றோ நாம் ஸகஜத்தில் பொருள்கொள்ளுவது? வழக்கத்தில் தனவான் என்றுசொல்லுவதற்குப் பதிலாகப் பணக்காரனென்றே சொல்லிவருகிறோமன்றோ? நமக்கு வேண்டுவன எல்லாவற்றையும் சாதிக்குந் திறமை பணத்திற்கு இருத்தலால் பணம், தனம், செல்வம் இவை ஒருபொருட் பன்மொழி யென நாம் வழக்கத்தில் கொள்ளுகிறோம். ஆனால் சற்று ஊன்றியோசிக்குங்கால் பணமும், செல்வமும் வெவ்வேறென்றே விளங்கும்.

செல்வமென்றால் என்ன? இருபது இருபத்தைந்து வருடங்களுக்கு முன் நம்முடைய கிராமாந்திரங்களில் தற்காலத்தில் இரண்டணா நாலணா தட்சிணை கொடுத்துவருகிற வைதீக கருமங்களில் தட்சிணைக்கு நெல்முதலிய நவதானியங்களைக் கொடுத்து வந்ததாக யாவரும் கேட்டிருக்கலாம். இப்பொழுதும் விவசாயத்தால் ஜீவனஞ்செய்துவரும் கிரஹஸ்தர்கள் அவர்களுடைய வேலைக்காரர்களுக்கு கொத்தளிப்பதேயன்றி பணமாகச் சம்பளம் கொடுப்பதருமை. கிராமங்களில் பலதலைமுறைகளாக பணிவிடை செய்துவரும் கொல்லன், தச்சன், குயவன், நாவிதன், கோனான் முதலிய தொழிலாளிகளுக்கு ஒவ்வொரு பூவிலும் அல்லது ஒவ்வொரு மாதத்திலு

104

ம் அவர்கள் செய்யும் வேலைகளுக்குக் கைமாருக ஏற்பட்ட நெல்லைக்கு இப்பொழுதுங் கொடுத்துவருவது நாம் கண்டுளோம். முற்காலத்தில் அரசாங்கத்திற்கு அளிக்க நேர்ந்த தீர்வையும் தானியமாகவே கொடுத்துவந்தார்கள். தற்காலத்தும் தனது பயிர் செய்பவர் சிறுபான்மையரோ ஆகையால், நிலமுடைய பெரும்பான்மையரும் வாரத்திற்கு நிலத்தை சம்சாரிகளிடம் அடைத்து பூமியில் நிச்சயித்த நெல்லை வாங்கிக்கொள்ளுகிறார்கள். பட்டணங்களிலும் கருவேப்பிலை, கொத்துமல்லி, போன்ற சில சில்லறை சாமான்கள் நம் வீடுகளில் அரிசிகொடுத்து வாங்குவது பார்த்திருக்கலாம். தமிழ்பள்ளிக்கூடம் உபாத்தியாயருக்கு பலவிடங்களிலும் பணங்கொடுப்பதில்லை. ஏகாதசி, அமாவாசை, பௌர்ணமை முதலிய புண்ணிய திதிகளில் அரிசி, பருப்பு, நெய் சர்க்கரை, காய், இலை முதலியனவைத்து சுயம்பாகமும், திருவோணத்தன்று எண்ணெய்யும் கொடுத்து வருவதாய் கேட்டிருப்பீர்கள். கோணங்கி, சித்தாசான், கூத்தாடி, வைராவி முதலியவர்கள் வந்தால் அவர்களுக்கு வேறுயாது கொடேபினும் வஸ்திரம் கொடுத்தாலன்றி அவர்கள் போவதில்லையே. அன்றியும் நம்முடைய வைதீககர்மங்களொவ்வொன்றிலும் புரோஹிதருக்கு காணயம் தட்சணை கொடுப்பதுடன் அரிசி, தேங்காய் முதலிய பலபொருள்களுங் கொடுப்பதும், சவுளம், காதுகுத்துதல், பிரசவம் முதலிய விசேஷங்களில் முறையே நாவிதன் தட்டான், வண்ணான் முதலியவர்கட்கு சுளகுப்பண்டம் என்று நம்பெண்டிர் கூறும் நவதானிய தானம் கொடுத்துவருவதும் யாவருமறிவார்கள். இவ்வழக்கங்களெல்லாம் யாதைக்குறிக்கின்றன. முன்காலத்தில் பணம் தற்காலம் போல அதிகப் பரிமாறப்படவில்லையென்றும் ஜனங்கள் தங்களுக்கு வேண்டிய சுகானுபவங்களை பணமன்றி வேறுபொருள்கள் வழியாய்த் தேடினர் என்றும், ஆனால் முற்காலத்தில் அமைந்தனவாகிய கருவிகள் தற்காலம் வழங்கிவரும் பெருங்கருவியாகிய பணத்திற்கு ஒப்ப பயன்படாவாயின வென்றும், சகல சுகிர்தங்களுமடைதற்கு பணம் முக்கிய கருவியாய் நிற்றற்கு தக்க காரணங்கள் இல்லாவிடின் பணமானது பொதுஜன சம்மதமான ஓர் கருவியாக ஒப்பப்பட்டதென்றும் நினைக்கலாம். ஆனால் பணமே செல்வமென்றுகொள்ள ஆதரவுமில்லை. செல்வம் பலவகைத்து. அவற்றுள் பணம் ஒரு வகை. எவ்வகைச் செல்வத்திற்கும் இரண்டு இலக்கணங்கள் பொருந்தும் மனிதருடைய சுகானுபவங்களுக்கு யோக்கியமானதாக விருப்பதுடன், ஒருவரிடத்திலிருந்து மற்றொருவர் கைம்மாறுதற்கு தக்கதாகவுமிருக்கும் பொருளியாவும் செல்வமே. முன்கூறிய திருஷ்டாந்தங்களால் தானியம் செல்வமேயென்பது விளங்கும்.

சத்தி— தெய்வமே! இனியென்று காண்போம்?

தனஞ்சயனும் பிரபுக்களும் பிரவேசிக்க.

மதன—ஐயோ, அரசனல்லோ!

தனஞ்— கேடுகெட்டவனே, ஒழி! என்
கண்ணிற் படாமல் வெளியே! இக்கட்டளையான பின்னும்
அரண்மனைக்குள் நின்றன் ஆபாசக்கட்டையைக் காட்டுவையேல்
செத்தாயடா ஓடிப்போ! என் உதிரத்திற் சோர் நஞ்சு நீ.

மதன—நம்மைக் கடவுள் தலைகாக்க! நம்மை யடுத்திருக்கும்
நல்லோரையும் அவர் வாழ்விக்க! நான்போகின்றேன்.

சத்தி— போக இதினும்
கூரிய வேதை மரணத்திலு மிருக்காது.

தனஞ்— அடங்காப்
பேயே, எனதிளமையைப் பேணுதல் விட்டிவனை
மூப்பு நெருங்கச் செய்தாயே.

சத்தி— ஆற்றுமைக் குட்பட்டிடலை
வருத்தாதிருக்க வணங்குகின்றேன், ஐயா; ஓ, தேவரீர்
வெகுளிக்கு நான் உணர் வற்றேன்; அதின்னும் சற்றே கடுத்தால்
அச்சமும் நன்பமுமெல்லாம் ஒடுங்கும்.

தனஞ்— அருள் கடந்து, உன்
அடக்கமுந் தாண்டினையா?

சத்தி— ஆசைதாண்டி. எக்கத்திலானேன்,
அப்பாற்கடந்ததருள்

தனஞ்— என்னரசி மருமகனை
அணைந்திட லாகு மொரு பெண்!

சத்தி— தவிர்த்த தொரு சுகமே!
குரங்கொழித்தியானொரு கையொழித்தொரு சிங்கம்விரும்பினேன்.

தனஞ்— நீ கசடன்.
ஒருவனை நாடிநின்றாய்; என் சிங்காசனத்தைச்சிறிமைக்
கிருப்பிடமாக்க நினைத்தாய்.

சத்தி— அந்தோ, அதற்கோரொளியே
நாடி நின்றேன்.

தனஞ்— அட, நீலி!

சத்தி— ஐயா, இம்மதனை நான்

விரும்பிய தென்குற்றமோ! தேவரீர் எனக்குற்றதுணை
யாக அவரை வளர்த்தீர்; அவரோ, எத்தையலுக்கும்
தலைமையினர், என்னை விற்றும் ஒவ்வாதவிலையுடையார்.

தனஞ்—உனக்கென்ன, பித்தப்பிடித்ததுவோ?

சத்தி— ஒருவாறு: தெய்வம்
சொஸ்தப்படுத்தகவேன்னை! இழிந்த குலத்திற் பிறந்
தேனும், மதனரும் நானும் அயலிருந்தோ மில்லையே!

தனஞ்— மடக்குரங்கே!

அரசி மீளவும் பிரவேசிக்க.

அவர் பின்னும் மனங்கலந்தார். நமது
கட்டளைபோல் நீ நடத்தியதில்லை அவனைக்கொண்டங்
கடைத்திடு.

அரசி— மன்னிப்பு வேண்டுகின்றேன். பொறு என்னருமை
மகளே, பொற! அருள்வேந்தே, இனி எங்கள் பாடெங்கட்கே
விட்டருள்வீர்; தேவரீரும் தம்பேரறிவாலுளத்தைத்
தேற்றீர்.

தனஞ்— இல்லை, அவள் காளோர் துளிச்சோரியாய்
மடிக; மூத்தும் இப்புன்மதியாற்சாக! போக

அரசி— சே! இனி நீ அடங்க
வேண்டும்.

விகடராமன் பிரவேசிக்க.

இதோ, உன்னடிமை வந்தான் விகடா! புதுமை
யென்ன?

விகட— தமது மருமகன் என் இயமானனுடன்
மற்பிடித்தார்

அரசி— ஐயோ! மோசமொன்றில்லையே?

விகட— என் தலைவர்
கோபக்கலி கொண்டு பாயாமல் கைவிளையாடி நின்று
ரன்றேல், விளைத்துயிருக்கும்; அயல் நின்ற மேன்மக்கள்வந்
தவரைப் பிரித்து விட்டார்.

அரசி— இதைக் கேட்க மிகமகிழ்ந்தேன்.

லும் சரித்திரக்காரர் சொல்லுகிறார். மேற்கூறிய குரூர தண்டனைகளும் ஒழுங்கீனமான விசாரணையின்பேரில் அதாவது இராக்காலத்தில் விசாரித்தும், வாதிசாக்ஷி இவர்கள் பெயரை குற்றவாளிகளுக்குத் தெரிவியாமலும் குற்றவாளிகளை தங்கள் குற்றங்களை ஒப்புக்கொள்ளும்படி ஹிம்சைசெய்தும் இவ்வண்ணம் அநீதி மார்க்கத்தில் விசாரணைசெய்து தண்டனையை விதிப்பதுவே வழக்கமாயிருந்தது.

பின்னர் ஆட்டா டேவ்ஸ் Auta dafes என்று ஒரு விசாரணை ஏற்படுத்தப்பட்டது. இதில் குற்றவாளிகள் பலரை ஒருங்கே சேர்த்து ஓர் ஞாயிற்றுக்கிழமையில் கோயிலுக்கு யிட்டுவந்து ஓர் போலி விசாரணைசெய்து கடவுள் நிந்தனை செய்தவர்களைத் தண்ணீரிலமிழ்த்தியும் எரிகின்றஅக்கினி வாய்ப் பெய்தும்உயிர்வதை செய்து வந்தார்கள். இதைப்பார்க்க ஜனங்கள் கும்பல் கும்பலாய் திரண்டுவருவார்களாம். அப்படி வந்துபார்த்தாலங்கித்தல்மோக்ஷவீடடைப்பவோர்ஹேது எனவெண்ணப்பட்டதாம். அரசர்களுங்கூட தம்பரிவாரங்களுடனிக்காட்சியைப் பார்த்து நேத்திரானந்தங்கொள்வார்களாம். இது வெல்லாம் இருபதாம் நூற்றாண்டின் நிலைவாயிலிருக்கும் நமக்கு கதைகள்போன்றும் சொப்பனங்கள் போன்றும் தோன்றுவதியல்பே. இன்குயிசிஷன், ஆட்டாடேவ்ஸ் என்பன இப்பொழுது சரித்திரக்கதைகளாய்ப் போய்விட்டதே தவிரக் கண்டவர் கிடையார்.

கால்வின் [Calvin] என்பவர் மதத்திற்கு விரோதமாயிருந்த சர்விடஸ் [Survetus] என்பவனை ஊரிலிருந்துஞ் சிறிது தூரத்திலுள்ள வோருன்னத யிடத்திற்குக் கொண்டுபோய், விறகுகளை அடுக்கி அதன் மேலவர் கைகால் முதலியவற்றை நன்கு பலமாய்க் கட்டி அவரெழுதிய மதவிரோத புஸ்தகத்தையுமுடன் சேர்த்துக்கட்டி அடுக்கிய விறகின்மேல்வைத்து ஊரார் பலரும்புகழ நெருப்பிட்டுவைத்தார்களாம். யூதர்களுக்குள் கடவுளில்லையென மறுத்தல் கடவுளைப்பற்றி யூதமதத்திற்கூறியவற்றிற்கு மாறாக யாதேனுங் கூறல் ஆகிய குற்றங்களுக்கு மரணதண்டனை விதித்து வந்தார்கள். இங்கிலாந்தில் 1698-ம் வருஷத்தில் ஏற்படுத்திய வோர் சட்டப்படி கிறிஸ்துமதவுண்மையை ஒப்புக்கொள்ளாதவர்களுக்கும் ஒன்றுக்கதிகமான தெய்வங்களுளவெனக் கூறுவோர்க்கும் உத்தியோகங்கொடுக்கக்கூடாதென்றும் இரண்டா முறை இக்குற்றங்களைச் செய்தவர்களுக்கு 3 வருடங்கடினகாவல் தண்டனையென்றும் விதித்திருந்ததாகத் தெரியவருகிறது. Thirty years war முப்பதுவருடப்போரும் Massacre of St. Barthalomew's day செயின்ட்பார்த்தலோமியூடே கொலைபாதகத்தொழிலும் மதஹிம்ஸைக்

குணம்பற்றி சேர்ந்த தென்பதுமதனால் ஆயிரக்கணக்கான ஆடவரும் பெண்களுஞ் சிறுவரும் சிறுமியருமுயிர் துறக்கநேர்ந்த தென்பதுஞ் சரித்திர வாயிலா யறியக்கிடந்தன.

இதுகாறுமெடுத்துக் கூறியவை. ஐரோப்பாகண்டத்தில் முற்காலத்திலெப்படிப்பட்ட நியாயம் நடத்தப்பட்டதென்றும், அந்நாட்டாரெவ்வகைப் பெருமையுடையவர்களாயிருந்தார்களென்று மறிவிக்கின்றன. அவர்களினிக்காலத்திய நிலைமை எடுத்துரைக்கவேண்டுவதன்று. முன்னர் மதவிஷயமான சுய அபிப்பிராயமென்னும் பதத்தையே வேரோடறுக்கத்துவஜங்கட்டி நின்ற ஜாதியார் இப்போ சுயஅபிப்பிராயமென்னும் வித்தை தம் நாட்டில் விதைத்து அதன் பயிரை நாளோரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய்ப் பாதுகாத்துப் பலன் கைப்பற்றினவர்களா யிருக்கிறார்கள். தங்கள் நாட்டிலேயே பிறந்து, தங்கள் நாட்டிலேயே வளர்ந்து தங்கள் மதத்தில் ஜீவித்துவந்த தங்கள் சகோதரர்கள் மதவிஷயத்தில் சிறிது மாறான எண்ணங்கொள்ளும் பொழுது அவர்கள் குருதியைக் குடித்துத் தங்கள் கோபதாகத்தை யடக்கமுயன்ற ஜாதியார், இப்போ ஆயிரக்கணக்கான மயில் தூரத்திலே பிறந்து, ஜாதியிலும் குணத்திலும் நிறத்திலும், வழக்கத்திலும் மதத்திலுந் தங்களுக்குமுற்றுமாறான ஆப்பிரிக்காதேசத்து நீகிரோவர் என்னுமடிமைகளை அவ்வடிமைத்தனத்தினின்றும் விடுவிப்போமெனத்துவஜங்கட்டி ஜெயித்தார்களென்னும்பெரும்பேற்றையுடையவர்களாயிருக்கிறார்கள். ஐரோப்பா கண்டத்தின் நாகரீகமும் அவர்கள் கல்வி முதிர்ச்சியும் புராட்டெஸ்டெண்டார் Protestants கொண்ட மதப்பொறுமையுமே இம்மாறுதலின் முக்கிய காரணமென்பது எளிதிலறியற்பாலது.

இதுகாறும் கிறிஸ்துமதவிஷயமாய் நடந்தஹிம்சைகளைக் கூறினோம். இனி ஓர் கையிற்கொரானுமற்றோர் கையில் வாளும்பிடித்துவந்த அரபிதேசத்து மகம்மதியரைப்பற்றிச் சிறிது கவனிப்போம். சுயமதம் நாட்டலும் பிறர்மதம் நிராகரித்தலுமே மோக்ஷவழி யென்றும் அதுவும் எவ்வகை உபாயத்தாலும் பழிசெய்தாகிலும் செய்தல் சான்றெனவுங் கொண்ட அரபியர்களியல்பிலேயே உலகத்தையாளும் புஜபலமுடையரென்றால் அவர் ஒரு காலத்தில் பூமியின் பெரும்பாகத்துக்கதிபதிகளாயிருந்தார்களென்றால் எவ்வண்ணமுலகத்தைத் தங்கள் ஆஞ்ஞா சக்கரத்தில்வைத்துச் சுழற்றியிருப்பார்களென்பதும் தங்கள் மதத்தை ஸ்தாபனஞ்செய்ய தங்களுக்குதவிபுரியும் வண்ணம் பூதேவிக்கு எத்தனை ஆயிரக்கணக்கான மானிடர்குருதியை விருந்திட்டிருப்பார்களென்பதும் மகமதிய சரித்திரம் வாசியாமலே

யாவருமெளிதிலுணரற்பாலதே. மகமதியப்பிரசங்கத்தைக் கேட்டு மதமாறுதலடைந்தவர் ஒருவராவது இவ்விந்தியாதேசத்திலிருந்திருப்பரோ? என்பது பலர்க்கு நிகழு மாசங்கை. அராபியரின் புஜபலபராக்கிரமும் உறையினிற் செல்லாதுலவித்திரியும் அவர்கள் கைவாளுமே இஸ்லாம் Islam மதத்தைப் பரப்பியதென்றால், அவர்களாற் பெருக்கப்பட்ட குருதிவெள்ளத்தை அளவிட்டுரைக்க எவராற் கூடும். நம்மிந்தியதேசத்திலேயே அவ்வராபியர்கள் எத்தனையோ கோயில்களையும் அதனுள்ளடங்கிய வெத்தனையோவிக்கிரகங்களையும் பாழாக்கினார்கள். பூஜிக்குமெத்தனையோமானிடர் தலைகளையுமொட்டையடித்துவிட்டார்களென்பது நம்மவர்க்கெல்லாந் தெரிந்தவிஷயமே. மதஹிம்சையானது வைராக்கியர்களது மனதைக்கூர்மைப்படுத்துகிறதென்பதையும், ராஜ்யத்தை சமாதானத்தோடு ஆட்சிசெய்ய இடையூறிழைக்கின்றதென்பதையுமுணர்ந்த பின்னர்தான் தமது ஹிம்சையைச்சிறிது குறைத்து மகமதியரல்லாதோர்க்குத்தலைவரியொன்றுஏற்படுத்தமுயன்றார்கள். இவ்வகைக் கூற்றினால் மகமதியமதம் வாளாலன்றி நிலைபெற்றிருந்திருக்கமாட்டாதெனவும், வாட்பிரயோகஞ்செய்வதை அம்மதநூலாகிய கொரான் அங்கீகாரஞ்செய்கின்றதெனவும் யான் மொழியவந்தேனல்லேன், அஃதென் கருத்துமன்று. நான் கூறவந்ததெல்லாம், அம்மதத்தார் முற்காலத்தில் வாள் ஒன்றையுமே மதவியாபகக் கருவியாய் உபயோகித்தார்களேயன்றிப் பிரசங்கத்தை அவ்வண்ணம்பிரயோகித்தார்களில்லையென்பதே. இத்துணைமகமதியரும் இக்காலத்தில் தம் வலிவிழந்தவர்போல், காலத்திற்கேற்கக் கோலங்கொள்ளென்பதை யனுசரித்தோ, அன்றித் தற்கால நவீன நாகரீகத்தை உட்கொண்டோ முன்னைய வேடமாறிப்பிறிதொரு வேடம்பூண்டிருக்கிறார்கள்.

பின்னர் நம்மிந்துதேசத்தையும் நம்மிந்தியர்களின் மதஹிம்சாகுணத்தையுங் கவனிப்பாம். மதஹிம்சா சரித்திரத்தில் நம்மிந்தியா கடைஸ்தானமே வகிக்குமெனத் துவக்கத்திற்கூறப்பட்டது. அஃதென்னையோவெனில், விலங்கினங்களும் வெறுக்குந் தன்மையதாங் குரூரச்செய்கையை ஆபரணமாக்கொண்ட ஆதிகாலத்திய கிறிஸ்தவர்களோடிணையிடும் பொழுதும் 'கல்லுளிமங்கன்போனவழி கல்லுநெல்லாந் தவிடுபோடி'என்றாற்போற் சென்ற மகமதியர்செய்கையோடொப்பிட்டுப் பார்க்குங் காலையும் நம்மிந்தியாவில் மதஹிம்சையில்லையெனக்கொள்ளலாமெனச் சொன்னதேயன்றி வேறன்று. இத்தேயத்திலும் மதஹிம்சைமுற்காலத்தில்வேண்டியமட்டிருக்கவேயிருந்தது. மற்றெத்தேயத்திலும் மதஹிம்சையொழிந்த யிக்

காலத்திலுங் கூட நம் நாட்டைவிட்டுத் தூரத்துவாசின்றி அப்பிசாசு குடிகொண்டேயிருக்கின்றது. என்று தான் நம் குடும்பத்தைக் கெடுக்க வந்த அக்கோடரிக்காம்பை அக்கினியிலாகுதிசெய்து அழிப்போமோ அன்றுதான் நாகரீகத்திலும் வல்லமையிலும் மற்றைத்தேசத்தாரையும் பின்னேட்டிடுச் சிறந்தினராவோம். நன்னிலைமையெய்துதற்கு குற்றங்களைதல் முதற்சான்றுதலால் முதற்கண் நங்குற்றத்தை எடுத்துக் கவனிப்பாம்.

மற்றையவர்களைப்பற்றிகவனிப்பதினும் நம்மைப்பற்றிக்கவனிப்பதினும் நாம்கொஞ்சம் நன்குயறியவேண்டுவேதவசியமானதால்சிறிது விரிவாய்க்கவனிப்பாம்.இந்தியாவின் மதஹிம்சையைமூன் றுபாகமாகப்பிரிக்கலாம்.இந்தியாவிலேயேபிறந்துஅவனேதனதுபால்யயௌவனபருவத்தைவளர்த்தஅறுவகை மதங்களுந் தம்முள்ளொன்றோடொன் றுமாறுபட்டுப்புரிந்தபோரில்நிகழ்ந்தஹிம்சைஆதிகாலத்தும் பின்னர்தன்டாபூபீகாசியாயத்துடன் போர்த்துவஜங்கட்டிவந்த மகம்தியமதத்துடனிந்து மதம் புரிந்தபோரில் விளைந்த, ஹிம்சை இடைக்காலத்தும் பின்னர் பெரும்பான்மை தந்திரத்தாலும் சிறுபான்மை விவகாரத்தாலும்மதயுத்தம் நிகழ்த்திவந்த ரோமன்கத்தோலிக் புராட்டஸ்டெண்டு மதங்களோடு தற்காலம்புரியும் போரில்விளையும் ஹிம்சை கடைபட்டது மாகும். நம் தேசத்தில் பூர்வந்தொட்டு கிரமமான சரித்திரங்கள் முறையே எழுதப்படாததால் பூர்விகஹிம்சைகளிலநேகங் தமது சிறியபரிமாணத்தாலும் மங்கியவொளியினாலுந் தூரத்தினின் றும்வெறுங்கண்ணாற்பார்க்கிற நம்புலன் களுக்குத்தோன்றாது மறைந்து விட்டது. இரண்டொரு விஷயங்களே பிரத்தியக்ஷமாய்ப்பிரகாசிக்கின்றன. அவற்றிற் சிலவற்றை இங்ஙன்கவனிப்பாம். பாலறாவாயரென்னும் பிள்ளைத்திருநாமம் பெற்ற ஞானசம்பந்தப்பெருமான் தன்னால் ஜெயிக்கப்பட்ட சமணரை ஒருங்கே கழுவேற்றுவித்தவோர் பாதகச் செய்கையன்றோ. சமணரிற்சிலர் துஷ்டர்களென்றாலும் இக்குரூரதண்டனையை ஒருங்கே அனைவருக்குங்கூறல் அவர்தம் பெருமைக்கழகோ? ஞானசம்பந்தர் சைவசமயமே சமயமெனஸ்தாபிக்க மிகஉழைத்தாரென்பதும் அவர் தமிழ்வல்லாரென்பதும் மிக்கசொல்வன்மை மனவன்மைகள் உடையாரென்பதும் ஐயுறக்கிடந்ததன்றெனினும் ஜீவகாருண்யமின்றி நம்போலிய ஜீவராசிகளை உயிர்துறக்கச்செய்தல் அவர்தம் பேராற்றலுக்கோரிழுக்கன்றோ? திருநாவுக்கரசுசுவாமிகளைச் சமணர்கள் கல்லுடன் சேர்த்துக்கடலுளாழ்த்த முயன்றதும் எரிகின்றதானவாயிற் போட்டதுமான பாதகச்செயல்கள் நம்நாட்டில் நட-

காலவன் இதைக்கேட்டமாத்திரத்தில் திடுக்கிட்டங்கிருந்தெழுந்தோடிப்பாய்ச்சலாய்ப் பாய்ந்து வந்து தூதனுடைய வாயை இறுகப் பற்றிப்பிடித்துக்கொண்டு "வாயைமூடு, மூச்சுவிடாதே, பத்திரம் அவன் கூடப்பரிவார ஜனங்கள் வந்திருக்கிறார்களோ?" என்று மெதுவாய்க்கேட்டான்.

"அவர் தனித்துத் தான் வந்திருக்கிறார்" என்று வெகுமெதுவாய்மறுமொழி சொன்னான்.

காலவன் சிறிது ஆலோசனை செய்து விட்டு அந்தத் தூதனைப்பார்த்து "நல்லது! யாருமறியாமலவனை யிங்கழைத்துக் கொண்டுவா, மிகுந்த மரியாதையுடன் நீ யிங்கு கொண்டுவர வேண்டும்; விரைந்து செல்; ஆனால் அவன் வந்திருக்கிற செய்தியை ஒருவரிடத்திலுஞ் சொல்லாதே; யாருக்கேனும் தெரியவந்ததோ நீ செத்தாய்" என்று கூறி அவனை விடுத்தான்.

அங்கம் II.

வாயிலில் நின்ற மனிதன் இச்செய்தியைத் தூதன் வாயிலாய்க் கேட்டு உள்ளே காலவனிருக்குமிடத்தின் சமீபமாய் வந்து விட்டானென்றுணர்த்தும் காலடியரவம் பதினைந்து நிமிஷங்களுக்குள்ளாகக் காலவன் செவியிற் பட்டது. அதுவரையிலும், வருபவனை எங்ஙனம் நடத்தல் தகுமென்றாலோசனை செய்தும் ஒரு முடிவிற்கும் வந்திலன். ஆயினும் அவன் கிட்டின உடன் சித்தசமாதானத்துடன் ஒருபுன் சிரிப்புப்பூத்த முகங்காட்டிக்கொண்டு நின்றான். அவன்தானிருக்கும் அறைக்குள் காலெடுத்துவைத்தவளவில் அதிவேகத்துடன் அவனை யெதிர் சென்றேற்று, அதிவிநயத்துடன் முழந்தாளூன்றி அவன் முன்னிலையி லுட்கார்ந்து கொண்டு அவன் கையைப் பற்றித் தன் இதழின் கிட்டக் கொண்டு போய் வைத்துக்கொண்டு.

"என்னிளவரசே நின்வரவு நல்லரவாகுக.நீர் நாட்டை விட்டுப்போய் எவ்வளவு காலமாயிற்று! ஆளைப்பார்த்தால் அடையாளந் தெரியக் கூடவருத்தமாயிருக்கிறதே. நீர் இம்மட்டுப் பிள்ளையாயிருக்கையில் இவ்விடம் விட்டுப்போனவரன்றோ! இப்பொழுது நல்ல யௌவனம் வாய்க்கப் பெற்றிருக்கிறீர். உம்மைப் பார்த்தால் போனதிசைகளில் நீர் பற்பல வெற்றிகள் பெற்றிருக்க வேண்டுமென்று சொல்லத் தடையில்லை. ஆயினும் நீர் இங்கு மறுபடி வந்த வேளை அவ்வளவு நல்லதாகக் காணவில்லையே என்பதை நினைத்து மாத்திரந்தான் யான் விசனிக்கின்றேன்" என்றான்.

இதைக்கேட்டு இளவரசன் திகிலடைந்து சிறிது நேரம் செயலற்ற
வன்போல் நின்று விட்டுக் காலவனை நோக்கி "மந்திரிவரிய நீ என்ன இங்
கை நினைத்துப் பேசினை? எனது பெரிய தகப்பனாகிய அரச சிகாமணி
சௌக்கியமா யிருக்கிறாரல்லவோ? என்னினிய ராஜகுமாரி செல்வியாளு
க்குச் சுகந்தானே? இப்படியாகப் பின் நீர்வேறெதை நினைத்து நான் வந்த
சமயம் 'நல்லதன்று' என்றீர்? சீக்கிரம் சொல்லும்" என்றான்.

காலவன் மிகுந்த வணக்கத்துடன் ஐயா, எனது நாதனாகிய அரசன்
பரகதியடைந்தனன்; அவரிறந்து இன்னும் ஒருமணி நேரம் கழியவில்லை;
இவ்விடத்தில் வைத்துத்தான் இறந்தார்; இரத்தப் பெருக்க நோயன்றோ
அவரைக்கொன்று விட்டது! அரசனது அருமைப் புதல்வியாகிய செல்வி
யாள் துயரப்பெருக்கால் தன்னுடைய கன்னியா மாடத்திற் குள்ளிருந்து
கொண்டு கதவுகளை யெல்லாம் அடைத்து விட்டாள். ஒருவருமுள்ளே
செல்லச் சம்மதிக் கின்றிலள். உம்மை எதிரேற் றுபசரித்தழைக்க யாரொரு
வனே மிஞ்சினோன். நீவிர் இங்குவந்தாய் விட்டதென்ற செய்தியைச் செ
ல்வியாள் மகாராணி அறிந்து கொண்டாள். ஆயினும் இன்றிரவிற் நம்மை
க்காண அவர் மனமிசைய வில்லை. நாளைக்காலையிற் பார்ப்பதாய் உத்தரவு
தந்திருக்கின்றனர்" என்றான்.

"இது வெகு சங்கடமாயிருக்கிறதே. என்னுடைய மன்னன் உயி
ரோடிருக்கையிற் காணப் பாக்கிய மற்றவனாய் விட்டேனே இதற்குஎன்
ன செய்வேன். மற்றச் செல்வங்களனைத்தும் என்னை விட்டொழிந்தன
வென்றாலும் எனக்குத் துயரமுண்டாயிராதே. நான் வெகு தூரம் ஓடி
போடிப் பரபரந்தன்றோ சிலதற மீண்டபின் இவ்விடம் வந்திருக்கின்றேன்.
இங்கு வந்தும் என் கஷ்டத்திற்கு நிவர்த்தி யின்றிப் போயிற்றே. அரச
னிறந்து கிடப்பதையும், பெண்ணரசி துக்கசாகரத்தில் முழுகிக்கிடப்ப
தையும் பார்ப்பதற்கோ இவ்விடம் என்னைக் காலன் கொண்டுவந்து விட்
டதும். காலவ, எனக்கிப்பொழுதே அரசனைக் காணவேண்டும்" என்
றான் இளவரசன். காலவன் பெருந்துயர முற்றிருப்பவன் போல் தலையை
மெல்லென அசைத்துக் கொண்டு "அரசன் கிடக்கும் நிலையை நீர் பார்த்
தால் சகிக்க மாட்டீர். வைத்தியனும் மற்றங்குள்ள மாதர்களும் தாஞ்செய்
து முடிக்க வேண்டிய காரியங்களைச் செய்து முடித்து விட்டு வந்தபின் அ
வரைப் பார்ப்பதே தகும்.

113

சமாசாரக் குறிப்புகள்.

இந்தியா ஞாபகச்சின்னம்:—லார்டு கர்சனால் சேகரிக்கப்படு கிற விக்டோரியாவின் பொது ஞாபகச் சின்னத்திற்கு கம்திருவி தாகூர் மஹாராஜா அவர்கள் இலக்ஷம் (100000) ரூபா அளி த்தார்கள். இனி நம் மலே நாட்டிலும் பிரத்தியேகம் ஞாபகச்சின் னம் ஒன்று நம்மரசர் இயற்றுவார் போலும்.

*　　*　　*

பாலக்காடு ராவ்பஹதூர் சின்னச்சாமிப்பிள்ளையவர்கள்:—இவர் கல்விச்செல்வம், பொருட்செல்வம், அதிகாரச்செல்வம், அருட் செல்வம், இவற்றை நிறையவுடைய ஒரு பெரிய பிரபு. ஒழு க்கத்திலும், பரோபகார சீலத்திலும் அங்ஙனமே ஆவர். ஆதலின ன்றே இக்கனவானை அவ்வூராரால்மீண்டுமீண்டும்முனிசிப்பல்சேர் மன் ஆகத் தெரிந்தெடுக்கப் பெற்று வருகின்றனர். இவ்வாறெரு ருங்கேயமைதல் அரிதன்றோ! இப்பொழுது லண்டன் ஆர்ட்ஸ் சொஸைட்டி (Arts society) யிலும் இவரை ஒரு அங்கத்தினராக தெரிந்தெடுத்தமை அறிந்து ஆனந்திக்கிறோம். [ப—ர்

*　　*　　*

ஐரோப்பாக் கலியாணங்களில் பெண்ணை முத்தமிடுவது ஓர் வகை மரியாதையா யெண்ணப்படும். இதில் நேரிட்ட மோசங்க ளைப்பாருங்கள், காசம் போன்ற ஓர் வியாதியைத் தேசத்தில் வை த்திருந்த ஓர்பெண் விவாக காலத்தில் முத்தமிட்டவர்கள் அனேக நாள் அவ்வியாதியாற் பிடிக்கப்பட்டு வருந்தினர்களாம். ஒருநாள் முத்த மிட்டவர்கள் பல நாள் வாடி வருந்தினல் பலமுறை முத்த மிட்டுக்கலந்த அவள் நாயகன் கதி யென்ன கதியாச்சுதோ? அதே கதிதான்,

•　　•　　•

தந்திவழியாக ஒருவர் கையெழுத்து அல்லது படம் முதலி யவற்றை அனுப்புவதற்கு ஓர் இயந்திரம் உண்டாக்கப்பட்டிருக்கி றது. புத்திசாலிகளின் முயற்சியினல் உலகம் எவ்வளவாகப் பயன டைகின்றது.

மணி ஒன்றுக்கு 8, 9 மைல் நடக்கக் கூடிய பொம்மை ஒன்று புதிதாகச் செய்திருக்கிறார்கள். அப்பொம்மை சுமார் 6 அடி உயர்ந்தது, அதன் உடல் புகைவண்டியின் இயந்திரத்துக் குள்ளது போல் நெருப்பு எரியவும் தண்ணீர் கொதிக்கவும் வேண்டிய பாகங்களை அடக்கிக் கொண்டிருக்கிறது. நீராவி வெளிப்பட அப்பொம்மையின் வாயில் சுருட்டுப்போல ஓர் குழாய் வைத்திருக்கிறது. புகை தலையிலுள்ள சிறுதுவாரத்தின் மூலம் வெளிப்படுகிறது. இப்பொம்மை நடக்கும் போது இரண்டு பெயர் கூடி நிறுத்தினாலும் நிற்காதாம்.

* * *

ஒரு சிறு கல்லை ஏதோ ஓர் வேலைக்காக உடைத்தார்கள் அதிலிருந்து ஒரு தேரை பொத்தென்று குதித்தது. எவ்வளவு காலம் இச்சீவ செந்து கல்லுட் சஞ்சரித்ததோ அறிகிலம். அன்னபானமும் வாயுவும் அணுவளவுங் கிடைக்காதிருந்தும் உயிர் பெற்றுவாழ்ந்தது. "கருப்பை யுண்முட்டைக்கும் கல்லினுட்டேரைக்கும் விருப்புற்ற முதளிக்கு மெய்யன்" எனப்பெரியோர் கூறியபடி பரமனுடைய திருவிளையாட்டை விளக்குகின்றது.

* * *

ஓர் குதிரையின் பிடரிமயிர் 14, அடி நீளமும் வால் மயிர் 11 அடி நீளமாயுமிருக்கிறது. அது ஐக்கிய மாகாணங்களின் மரியான் என்ற இடத்தில் வளர்கிறதாம். குதிரைகளில் விநோதக் குதிரை இதுதான்.

* * *

மழை பெய்யச்செய்யும் ஓர் இயந்திரம்:—பெரிய பீரங்கிகளில் வெடிமருந்து செலுத்தி ஆகாயத்தில் வேட்டுக் கிளப்புவதாற்சிலர் மழை பெய்யச் செய்தனர். இது பெரும்பாலும் பலித்து வந்தது. இப்பொழுது பிரமாண்டமான சக்கரம் ஒன்று செய்து அதை விரைவாய்ச் சுழற்றுவதாற் பூமியின் மீதுள்ள குளிர்ச்சியான காற்றின் மேல் உஷ்ணமான வாயுதாக்கி நெருக்கும்படி பெருப்புயல் போன்ற சுழற்காற்றுப் பிறக்குமாம். உடனே மழையும் பொழியுமென அந்த இயந்திரத்தை சிருஷ்டித்தவர் சொல்லுகிறாராம். இது சித்தியாகுமானால் உலகிலுள்ளவருக்குப் பஞ்சமேது?

அறிவித்தல்.

நமது பத்திரிகையை ஆதரிக்கும் வள்ளன்மை யுடையார்களென சிலகனவான்களை மதித்து பத்திரிகைகள் அனுப்பிவருகின்றோம். அவர்களில் மிக்கோர் குற்றமறிய பெற்றுவருகின்றமையால் அவர்கள் தம்மையும் நமது சந்தாதாரர்களாய்ப் பதிவு செய்து கொண்டோமென்பதை அக்கனவான்களுக்கு ஞாபகமூட்டுகின்றோம்.

☞ இதுவரை சந்தாப்பணம் அனுப்பித்தராத உள்ளூர் வெளியூர் கையொப்பக்காரர்கள் 5-வது இலக்கப்பத்திரிகை வெளிவருவதற்குள் தங்கள் தங்கள் சந்தாவை அனுப்பி தந்து ஆதரிக்க வேண்டுகின்றோம். அல்லது (V.P.) வழி 5-வது இலக்கத்தை அனுப்புவோம். அதனையாவது பெற்று ஆதரவுபுரிவார்களென நம்புகின்றோம்.

பணம், விஷயம், கடிதம் முதலியனயாவும் அடியிற்கண்ட விலாசத்திற்கே யனுப்பித்தல் வேண்டும்.

விலாசம்:—

அறிவு விளக்கம் பத்திராதிபர்,
திருவனந்தபுரம்.

3-வது இலக்கத்தில் 55-56-வது பக்கங்களில் ஆங்கிலேய அரசாங்க அமைப்பில் குறிப்பிட்டிருக்கிற சம்பளங்களை வருடச் சம்பளமெனக்கொள்க.

சந்தாவரவு.

மகா-ள-ள-ஸ்ரீ	நம்பர்.		ரூ.	அ.
,,	34	ரா. குளத்தூரானுசாரியவர்கள்	2	2
,,	264	எ. ஆர். முத்தழகிரிநாயுடு அவர்கள்	2	0
,,	387	சண்முகசுடாக்ஷ முதலியாரவர்கள்	2	0
,,	303	பி. எஸ். கிருஷ்ணபிள்ளையவர்கள்	2	0
,,	319	சிவராமமூர்த்தியபிள்ளையவர்கள்	2	0
,,	310	ஆர். அப்பிமியாசாஸ்திரியவர்கள்	2	0
,,	165	க. கந்தசுவாமிபிள்ளையவர்கள்	2	0

(இன்னும் வரும்).

☞ குறிப்பு:— நமது சந்தாதாரர்கள் கடிதங்கள் எழுதும்பொழுது தங்கள் ரிஜிஸ்டர் நம்பர் போட்டு எழுதவேண்டுகின்றோம். மாதிரிப் பத்திரிகை வேண்டுவோர் ரூ. 0-4-6 அனுப்பினால் அனுப்பப்படும்.

ப—ர.